முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1552

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.12.2023, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞான பிரம்மமே
ஓங்கார ஞான சொரூபமே
ஓங்காரன் என் சூட்சும வடிவமே
உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
ஆசியதும் சோபகிருது சிலை திங்கள்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 13 ம் நாள், 29.12.2023, வெள்ளிக்கிழமை)
அரங்கனுக்கு சக்தி கூட உரைப்பேன்
உரைக்கவே அரங்கன் எந்தன் பலமாய் இருக்க
3. ஒவ்வொரு நாளும் அரங்கனுக்கு ஆற்றல் கூட்டி
தயவாக ஞானியர்கள் துணைவர
தர்ம நெறி கொண்டு
ஞானிகளோடு மகா சக்திகளும்
4. மகாசக்திகளும் அரங்கனுக்கு காப்பாய் இருக்க
மண்ணுலகில் உலகோர் அரங்கன் வழியே தொடர்ந்து வந்து
மாதவசியே தர்மனே தவராஜனே என வணங்கி
மக்களெல்லாம் மகா தீட்சை ஏற்று இனிதே
5. மரணம் வெல்லும் சக்தி கொடு என வேண்டி
மறுமை போக்கவும் ஆற்றல்பட வேண்டி வர
வருகின்ற மக்கள் அனைவருக்கும்
வல்லமை கூடி அரங்கன் தீட்சை வழி வடிவேலன் நான்
6. இறங்கி அற்புதம் நடத்துவேன்
இந்த உலகத்தில் பெருமாற்றத்தை தந்து
இனிதே பேருலகம் எக்காலமும்
பிரளயம் பேரிடர் காணாதவண்ணம்

7. காணாதவண்ணம் பாதுகாப்புத் தந்து
உலக நலம் காத்து உலகில் ஞான ஆட்சியும்
உயர்வான தர்மவான்கள் தலைமை கொண்ட
தக்கநல் சபையும் உருவாக்கி தரணியை காப்பேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–